# 2.4 இந்த ஒளி

**வேத வசனம்:** நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். 1 யோ. 1:9

**சத்தியம்:** இயேசு சொன்னார், "நானே உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன். என்னைப் பின்பற்றுகிறவன் இருளில் நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்"



## அறிக்கை:

என்னுடைய பாவங்களை நான் தேவனிடம் அறிக்கையிட்டால் எனக்கு அவருடைய சுத்திகரிப்பும் அவருடைய ஒளியும் கிடைக்கும்

## பாடக்குறிப்புகள்

- இருளிலிருந்து வெளிச்சத்திற்கு - *அப். 26:18, யோவான் 8:12*
- ஒளியின் பிள்ளைகளாக மாறுதல்
- நன்மைகளை மட்டும் பார்த்தல் - *லூக்கா 11:34*
- பாவங்களைத் தேவனிடம் அறிக்கை செய்தல் - *மத்தேயு. 5:8*

## ஆர்வமூட்டும் வினாக்கள்

(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- *தேவனுடைய ஒளியைப் பெற்றுக்கொள்ளுதல் என்றால் என்ன?*
- *யோவான் 8:12 ன் படி ஒரு மனிதன் ஜீவ ஒளியைப் பெற்றுக்கொள்வது எவ்வாறு?*
- *இருளில் உள்ள வாழ்க்கையை உன்னால் விவரிக்க முடியுமா? (யோவான் 3:19,20)*

## ஜீவ ஒளி

ஜீவ ஒளியாகிய தேவனுடைய ஒளி இருளாகிய வாழ்வின் கஷ்டங்களிலிருந்து நம்மை விடுதலையாக்கலாம். இருள் நிறைந்த இந்த உலகத்தில் தேவனும் அவருடைய வார்த்தையுமே நமக்கு வழி காட்டும் ஒளியாகும். உலகப் புகழ்பெற்ற ஆச்சரியமான கிருபை என்ற பாடலை எழுதியவர் ஜான் நியூட்டன் என்ற கொடுமைக்கார ஆங்கில மனிதர். அவர் கடலில் உண்டான கொந்தளிக்கும் புயலில் சாகும் தருவாயில் தேவனைக் கண்டுகொண்டார். அப்பொழுது மனக்கடினமான அடிமை வியாபாரியாக இருந்த அவருடைய வாழ்க்கை ஜீவனுள்ள தேவனுக்கு சேவை செய்பவராக மறுரூபமடைந்தது. இந்தப் படத்தில் தேவன் உன்னுடைய நன்மைக்காகக்கொடுத்த கஷ்டத்தை வரை அல்லது எழுது.

## வேதபகுதி

*யோவான் 1:1-5*

## செயல்

உன்னுடைய கண்கள் தேவனுடைய ஒளியைக் காணட்டும். உள்ளம் தேவக்கிருபையால் நிரம்பட்டும். ஒவ்வொரு நாளையும் தேவனுடைய வார்த்தையை வாசித்து ஆரம்பி.

## சிந்திக்க:

*உன் வாழ்க்கையில் தேவனுடைய ஒளியை எவ்வாறு காட்டலாம்?*

______________________________

______________________________

## ஜெபம்:

*தேவனுடைய ஒளியாகிய ஜீவ ஒளி உன்னை வழிநடத்த வேண்டி இங்கே ஒரு ஜெபத்தை எழுது.*

______________________________

______________________________